செ.வெ.எண்: 26/ஏப்ரல் நாள்: 20.04.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-ஐ முன்னிட்டு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்த செய்தியாளர்கள் சந்திப்பு

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (20.04.2016) சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-ஐ முன்னிட்டு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது.

செய்தியாளர்கள் சந்திப்பில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

இராமநாதபுரம் மாவட்டத்தில் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-ஐ முன்னிட்டு தேர்தல் முன்னேற்பாடு பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் (29.02.2016 அன்றைய கணக்கின்படி) 5,44,021 ஆண் வாக்காளர்களும், 5,40,722 பெண் வாக்காளர்களும், 74 இதர வாக்காளர்களும் ஆக மொத்தம் 10,84,817 வாக்காளர்கள் உள்ளன. மேலும் 15.02.2016 முதல் 29.02.2016 வரை சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு போலி வாக்காளர்களாக கண்டறியப்பட்ட 3406 நபர்களும், 8881 இறந்தவர்களும், 77 இடம் பெயர்ந்த நபர்களும் ஆக மொத்தம் 12,364 நபர்களின் பெயர்கள் வாக்காளர் பெயர் பட்டியலிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மாவட்டத்தில் உள்ள நான்கு முதியோர் இல்லங்களில் வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு முதியோர் இல்லங்களில் இருக்கும் 59 நபர்களில் 35 நபர்களின் பெயர் வாக்காளர் பெயர் பட்டியலில் இடம்பெற்றுள்ளது. மீதமுள்ள 24 நபர்களை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்து வாக்காளர் அடையாள அட்டை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் தேர்தல் வாக்குப்பதிவிற்காக மொத்தம் 1307 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 73 வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளின்படி பதற்றமான வாக்குச்சாவடி மையங்களாக கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாக்குச்சாவடி மையங்களில் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேர்தல் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதாக கண்டறியப்பட்டுள்ள 334 நபர்கள் மீது குற்றவியல் நடைமுறைச் சட்டடத்தின் (CRPC Act) கீழ் வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுதவிர, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள உரிமம் பெற்ற துப்பாக்கி உரிமையாளர்கள் 102 நபர்களிடமிருந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக காவல்துறை வசம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிணையில் வெளிவரமுடியாத வழக்குகளின் கீழ் உள்ள 25 நபர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. இதுதவிர, தேர்தல் நடத்தை விதிமுறை மீறல் தொடர்பாக தேர்தல் கட்டுப்பாட்டு அறைக்கு இதுவரை 82 புகார்கள் வரப்பெற்று, 80 புகார்களின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள 2 புகார்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 13 வாக்காளர் சேவை மையங்கள் மூலம் மொத்தம் 2863 வரப்பெற்று இதுவரை 806 நபர்ளுக்கு புதிய வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டள்ளது. மேலும் தேர்தல் பணியில் ஈடுபடும் அரசு அலுவலர்கள் வாக்களித்திட

ஏதுவாக தபால் வாக்குப்பதிவு செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 11,951 அரசு அலுவலர்கள் தபால் வாக்குப்பதிவு செய்திட அந்தந்த அலுவலர்களிடமிருந்து வாக்காளர் அடையாள அட்டை எண் சேகரிக்கும் பணி நடைபெற்று வருகின்றது. தேர்தல் பணிகளுக்குத் தேவையான 162 வாகனங்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் மூலமாகவும் , மாற்றுத்திறனாளிகளின் வசதிக்காக 258 சக்கர நாற்காலிகள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தின் மூலமாகவும் ஏற்பாடு செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கு இரண்டு கட்ட பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுள்ளன.

வாக்குச்சாவடி நிலை விழிப்புணர்வு குழுக்களைச் (Booth Level Awareness Group) சார்ந்த நபர்களின் மூலம் "எங்கள் வாக்கு விற்பனைக்கு இல்லை", என்ற எண்ணத்தை பொதுமக்களிடையே ஏற்படுத்தும் விதமாக மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் ஏப்ரல் 22-ம் தேதி முதல் 29-ம் தேதி வரை வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வேட்பு மனுத்தாக்கல் செய்யும் நாட்களில் காலை 11.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை வேட்பாளர்கள் வேட்பு மனுத்தாக்ல் செய்யலாம். வேட்பாளர்கள் வேட்பு மனுத்தாக்கல் செய்ய வருகைதரும்போது தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளின்படி தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தின் 100மீ சுற்றளவிற்குள் வேட்பாளர் வாகனத்தையும் சேர்த்து மூன்று வாகனங்களுக்கு மட்டுமே அனுமதி உண்டு. வேட்பாளர் வேட்பு மனுத்தாக்கல் செய்யும்போது வேட்பாளருடன் 4 நபர்கள் மட்டும் (வேட்பாளரையும் சேர்த்து மொத்தம் 5 நபர்கள்) மட்டுமே தேர்தல் நடத்தும் அலுவலரின் அலுவலகத்திற்குச் அனுமதிக்கப்படுவர். எனவே, வேட்பு மனுத்தாக்கல் செய்ய வருகை தரும்போது வேட்பாளர்கள் தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளை கட்டாயம் பின்பற்றிட வேண்டுமென மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

செய்தியாளர் சந்திப்பின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், பரமக்குடி சார் ஆட்சியர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ப.காந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திருமதி.சாந்தா, தேர்தல் வட்டாட்சியர் திரு.தர்மன் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**